T-UN-675

தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2035

பிப்ரவரி 2004

மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் பயிற்சியும்

தமிழ்ப் பல்லைக்கழக மொழிபெயர்ப்புத் துறையின் சார்பில் ''மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் பயிற்சியும்'' என்ற தலைப்பிலான புத்தொளிப் பயிற்சியின் தொடக்க விழா 06.02.04 அன்று நடைபெற்றது.

அனைத்துக் காலகட்டங்களிலும் தகவல், பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கு மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக விளங்கி வருகிறது எனச் சென்னைப் பல்கலைக்கழகப் பிரெஞ்சு மொழித்துறை முன்னாள் தலைவர் கே.மதனகோபாலன் தம்முடைய தொடக்கவுரையில் தெரிவித்தார்.

''பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து மொழிபெயர்ப்புக் கலை தமிழில் உள்ளது. இந்திய மொழிகளுக்குள்ளும் மொழிபெயர்ப்புகள் நடைபெற்றுள்ளன.

ஆனால் மேலைநாடுகளில் உள்ளது போன்று அறிவியல் அடிப்படையிலான மொழிபெயர்ப்பு ஆய்வுகள் இங்கு இல்லை.



புத்தொளிப் பயிற்சி

பிரான்சில் மொழியியல் சிந்தனைகளும், மொழிபெயர்ப்புச் சிந்தனைகளும் சமகாலத்தில் வளர்ந்துள்ளன. ஒரு மொழியில் உள்ள சொற்கள் அந்தந்தச் சமுதாய அமைப்பைப் பொறுத்தே அமையும். மொழிபெயர்ப்பு மூல நூலை மாசுபடுத்தும் தன்மை உடையது என்ற வாதங்களை மீறி மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. மொழிபெயர்ப்பு இல்லை எனில் ரஷ்ய, இத்தாலிய, ஜப்பானிய இலக்கியங்களை நாம் அறிந்து கொண்டிருக்க முடியாது. மொழிபெயர்ப்பை இரவல் முறை, பதிவு முறை, நேருக்கு நேர் மொழிபெயர்ப்பு முறை, வேறுவகைச் சொல் மொழிபெயர்ப்பு, சரிநிகர் மொழிபெயர்ப்பு, தழுவல் முறை மொழிபெயர்ப்பு என 7 வகைகளாகப் பிரித்துள்ளனர் பிரெஞ்சு அறிஞர்கள்'' என்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய தலைமையுரையில், ''தொல்காப்பியம் மொழிபெயர்ப்பு குறித்துப் பேசியுள்ளது. ஒரு மொழியில் கூறிய படைப்பை இன்னொரு மொழியில் கொண்டு வருவது எளிதன்று. எந்தக் கவிதையை மொழிபெயர்க்க முடியாதோ அதுவே சிறந்த கவிதை எனக் கூறுவர். மொழிபெயர்ப்பு நூலுக்கு, மூல நூலுக்கு உள்ள சிறப்பு உண்டு. மொழிபெயர்ப்பு எளிமையானதன்று. அது ஒரு படைப்புக் கலை. அதற்குப் பண்பாட்டுப் பின்புலம் தேவை. ஏறத்தாழ 40 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது'' என்றார். மொழிபெயர்ப்புத்துறைத் தலைவர் ச.இராதாகிருட்டிணன் அனைவரையும் வரவேற்றார்.

-ச.இராதாகிருட்டிணன், மொழிபெயர்ப்புத்துறை

நாட்டுப்புறவியலும் பண்பாடும்

புத்தொளிப் பயிற்சி

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையின் சார்பில் ''நாட்டுப்புறவியலும் பண்பாடும்'' என்னும் தலைப்பில் கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி பிப்ரவரி 4 முதல் 24 வரையிலான தேதிகளில் நடைபெற்றது. தொடக்க விழா 04.02.04 அன்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

''பழைய மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் ஆவணங்களாகவும், பண்பாட்டை இணைக்கும் பாலமாகவும் நாட்டுப் புறவியல் துறை விளங்கி வருகிறது'' என்பதைத் தம் தலைமையுரையில் அழுத்தமாகக் குறிப்பிட்ட துணைவேந்தர், ''மறைந்துவரும் பழைமை வாய்ந்த வழக்காறுகளைச் சேகரிக்கவும் ஆராயவும் இப்புத்தொளிப் பயிற்சி துணைநிற்கும்'' என்றும் குறிப்பிட்டார்.

நாட்டுப்புறவியல் துறையில் ஆற்றிய பணிக்காகக் குறள்பீட விருது பெற்ற பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் தே.லூர்து மையக் கருத்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்ப் பொறியாளர் சு.குழந்தைவேலு நாட்டுப்புறவியல் துறை மாணவர்களின் பயன்பாட்டிற்காகச் சுமார் ரூ.2000/- மதிப்புள்ள ஒலிப்பதிவுக் கருவியை இசைத்துறைத் தலைவர் இ.அங்கயற்கண்ணி வழியாக வழங்கினார்.

இருபத்தோரு நாள் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளிலிருந்தும், கேரள கோழிக்கோடு பல்கலைக்கழகத்திலிருந்தும் 21 பேராசிரியர்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்குத் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்லூரிகளில் பணிபுரியும் 28 வல்லுநர்கள், 66 சொற்பொழிவுகள் வாயிலாகப் பயிற்சி அளித்தனர். இப்பயிற்சியின் முற்பகுதி நாட்டுப்புறவியல் விளக்கம், வரையறை, உலகளாவிலும் இந்திய அளவிலும் இத்துறையில் நடைபெற்றுவரும் பணிகள் முதலியவற்றை எடுத்துரைப்பதாகவும், இரண்டாவது பகுதி நாட்டுப்புற வழக்காற்று வகைமைகளை முறையாக அறிமுகப்படுத்துவதாகவும், மூன்றாவது பகுதி நாட்டுப்புறவியல் கோட்பாடுகள், நாட்டுப்புறவியலும் பண்பாடும் என்பது குறித்தும் அமைந்திருந்தது.

24.02.04 நடைபெற்ற நிறைவுவிழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலத் தலைவர் பேராசிரியர் து.சீனிச்சாமி தலைமையேற்றார். மாண்பமை துணைவேந்தர் தம் நிறைவுரையில், ''நாட்டுப்புற இலக்கியம் தன்னம்பிக்கைக் குரலாக விளங்குகிறது. மகிழ்ச்சி, துன்பம் என்று அனைத்தையும் அது பதிவு செய்கிறது'' என்று குறிப்பிட்டார். பயிற்சிபெற்ற பேராசிரியர்களுள் நால்வர் கருத்துரை நல்கினர். துணைவேந்தர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கிப் பயிற்சியாளர்களை வாழ்த்தினார்.

தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக்களில் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.இராமநாதன் வரவேற்புரையும் நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் முனைவர் க. சாந்தி நன்றியுரையும் வழங்கினர். முனைவர் சி.சுந்தரேசன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

-முனைவர் ஆ.இராமநாதன், நாட்டுப்புறவியல்துறை

04.02.04	புத்தொளிப் பயிற்சி - நாட்டுப்புறவியல்துறை
06.02.04	புத்தொளிப் பயிற்சி - மொழிபெயர்ப்புத்துறை
09.02.04	புத்தொளிப் பயிற்சி - அகராதியியல் துறை
20.02.04	தத்துவ மையம் - கிறித்தவம் - கருத்தரங்கு
24.02.04	நாட்டுப்புறவியல்துறை - புத்தொளிப்பயிற்சி நிறைவு விழா
26.02.04	மொழிபெயர்ப்புத்துறை - புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா
29.02.04	அகராதியியல் துறை - புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா

பிப்ரவரி 2004இல்...

நடைபெற்ற நிகழ்வுகள்

அரசு குழந்தைகள் நலக் குழுமத்திற்குத் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர் நியமனம்

தஞ்சாவூர் மாவட்ட குழந்தைகள் நலக் குழுமத்திற்குத் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சமூகஅறிவியல்துறை இணைப் பேராசிரியர் திரு முனைவர் எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகம் பாராட்டி மகிழ்கிறது.

அகராதியியலும் சொற்பொருண்மையியலும்

தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில், பல்கலைக்கழக நல்கைக் குழுவினர் நிதியுதவியுடன் "அகராதியியலும் சொற்பொருண்மையியலும்" என்னும்

புத்தொளிப் பயிற்சி

தலைப்பிலான புத்தொளிப் பயிற்சி 09.02.04 முதல் 29.02.04 வரை நடைபெற்றது.

தொடக்கவிழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி தலைமையேற்றார்கள். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச.அகத்தியலிங்கம் "அகராதியும் இலக்கணமும்" எனும் பொருளில் மையக் கருத்துரையாற்றினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய முன்னாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை.சண்முகம் வாழ்த்துரை வழங்கினார்கள். இப்புத்தொளிப் பயிற்சியில் அகராதியியல் அறிமுகம், அகராதியியலும் இலக்கணமும், குறியீட்டியலும் பொருண்மையியலும், நோக்குநூல்கள், அகராதி வகைகள், பொருண்மையியல், அகராதிகளின் பயன்பாடு கலைச் சொல்லாக்கம், நிகண்டுகள், பிழை ஆய்வு, தற்கால அகராதிகளின் அமைப்பு, பொருள்விளக்கம், கணிப்பொறியும் தமிழும், இயற்கை மொழி ஆய்வு, தூய தமிழ் கலைச்சொல்லாக்கம் என்ற பல தலைப்புகளில் சிறப்புரைகள் இடம்பெற்றன. பயிற்சியாளர்களின் வினாக்களுக்கு வல்லுநர்கள் மிக விரிவாகவும் சிறப்பாகவும் விளக்கங்கள் அளித்தனர். பயிற்சியாளர்களுக்கென அகராதிகள் காட்சி ஒன்றும் நடத்தப்பெற்றது. பல்வேறு வகையான பொது மற்றும் சிறப்பு அகராதிகள் காட்சிக்கு வைக்கப்பெற்றன.

நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக வளர்தமிழ்ப்புலத் தலைவர் முனைவர் திருமதி அரோமா கு சாம், தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் கி.அரங்கன், பாவலரேறு திரு ச.பாலசுந்தரம் பங்குபெற்றனர். முனைவர் எச்.சித்திரபுத்திரன் வரவேற்புரையும் முனைவர் திருமதி மா.பார்வதியம்மாள் நன்றியுரையும் கூறினார்கள்.

-அகராதியியல் துறை

பிப்ரவரி 2004இல்...

முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

	ஆய்வாளர் பெயர்/துறை	தலைப்பு	வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள்
1.	ச. ஜான்போஸ்கோ சமூகஅறிவியல் துறை	A Study on Socio-economic perspectives of Anjali Ashram, Mysore	13-02-2004
2.	டி. சந்திரசேகரன் தத்துவ மையம்	Women's Liberation in the Teachings of Jesus Christ and its Relevance to the Women of the Tiruchirapalli Thanjavur Church of South India	23-02-2004
3.	த. கலா ஓலைச்சுவடித்துறை	செங்கற்பட்டு மாவட்டம் ஆவணங்களில் நீர்ப்பாசனமும் விளைபொருள்களும்	27-02-2004

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

திரு. பெருமாள் அவர்கள்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

Globalisation has improved higher education

The process of globalisation has improved the status of higher education in the country, observed Dr.E.Sundara moorthy, Vice-Chancellor, Tamil University.

He made the observation while inaugurating a three-day symposium on `Recent Trends in Biological Research' conducted by the AVVM Sri Pushpam College here on 17.02.04. Speaking at the symposium, Dr.E.Sundaramoorthy said that India had 30 universities and 591 colleges at the time of Independence. Now the country has 300 Universities, 15,000 colleges and 3.5 lakh faculties, he added.

He stressed that quality of the education could be enhanced by changing the course content, the curricula and updating the syllabii keeping in mind the developments in the respective fields. Conducting refresher courses for teachers and updating their teaching skills would also make higher education more meaningful, he said.

Efforts should be made to enhance students ability to achieve betterment in the field of bioinformatics such as genomics and protomics, he said and underlined the need to use science in a proper way.

Biology and genetic engineering fields provide ample opportunities to serve human life, preserve it and also nurture it, he noted.

K.Thulasiah Vandayar, correspondent of the college, in his presidential address, laid stress on character building of the students. He asserted that only a disciplined society could achieve progress and prosperity. Underlining the need to respect girls, Vandayar called upon the students to overcome hurdles in life and help others.

-Indian Express, 18.02.04

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் -613001